## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - முன்னுரை

---

உலகில் மனிதன் பொருள் ஆசையில் உழன்று, தன் சுகத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று வாழும் கலியுகம் இதுவே!கலி என்றால் ”அறியாமை”. எது உண்மை? எது பொய்? என்று தெரியாத நிலை.அதைவிட ”இது உண்மை அல்ல!” என்று தெரிந்தும் அதைப் புரிந்து ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனோபாவம் கொண்டவர்கள் கலியுக ஜீவிகள்.

வர வர மிகவும் குறுகிய மனம் கொண்டு மிக்க சுயநலத்துடன் மக்கள் வாழ்வதால், அதே தன்மையை பூமியும் மனிதர்களுக்கு ப்ரதிபலிக்க ஆரம்பித்துள்ளது.நாம் எப்படியோ, நம் சமூஹத்தின் எண்ணமும் அதே ஆகும்.

இன்று அனைவரும் படிக்கின்றனர்.வாழ்க்கையில் பொருள் ரீதியில் முன்னேற்றம் காண்கின்றனர்.ஆனால் ஆன்மீக முன்னேற்றம்? அமைதி? பூரணத்துவம்? மிகப் பெரிய ஐயக்குறியாக மனிதவாழ்வு சில ஆண்டுகளாய் மாறிவருவதைக் காண்கிறோம்.

மனித வாழ்க்கை ஒரு அல்ஜீப்ரா ஃபார்முலாவாக, படித்து, பொருள் தேடி, கல்யாணம் செய்து, குழந்தை பெற்று....என மாறிவிட்டது.

ஆன்மீகத்துக்கும் மதத்துக்கும் வேற்றுமை இல்லாமல் போய்விட்டது.ஆன்மீகப் பெரியோர்களும் மக்களுக்குக் காலத்துக்கு ஏற்றபடி வழிகாட்டுவதில்லை.பணமும், பதவியும், விருதும், பகட்டும், சாதியும் முன்நிற்கின்றன.

கோயில்கள் பணம் சம்பாதிக்க மட்டும் வழிசொல்லும் இடங்களோ? என்ற எண்ணம் ஏற்படுகின்றது.

அன்றும் இன்றும் எண்ண வித்யாசம்?
பல வித்யாசங்கள்!
அன்று இல்லாதவர் இல்லை என்பார்.இன்று இல்லாதவர் இருக்கிறது போல் காட்டுகின்றார்.அதற்காக என்ன வேண்டுமானாலும் ஏழையும் செல்வந்தனும் செய்யத் தயார்.

அடியார் யார்?
அன்புடன் அனைவரையும் தனக்குள் இனம் கண்டு, அவர்களை ஏற்றுக் கொண்டு,

அவர்தம் வாழ்க்கை மேம்பாட்டுக்கு வழிகாட்டிய ஆன்மீகப் பெரியோர் அன்பர்-அடியார் ஆவர்.அவர்களுக்கு மதம்-குலம்-சாதி-மொழி-தொழில் வேற்றுமை இல்லை.

உண்மையான தெய்வீகத்தைத் தன்னுள்ளும் பிறருள்ளும் கண்டு, தன் தொழிலின் மூலம் சமூஹ மேம்பாட்டுக்கு உதவும் எவனும் அடியானே! அவன் யாராய் இருப்பின் என்ன?

தென் தேசத்து ஆழ்வார்கள்-நாயன்மார்கள் போல் வட பாரத தேசத்தில் சுமார் 600 நூற்றாண்டுக்காலத்தில் வாழ்ந்த 88 அடியார்கள் பக்த விஜய புராண நாயகர்கள் ஆவர்.இவர்கள் அனைவரும் சமூஹ மீட்டுருவாக்கம் செய்தனர்.தொழில் செய்யும் போதே இறைவனைப் பாடினர்.அதன் மூலம் தன் தொழிலை நாடி வந்த பொதுஜனத்துக்கு ஆன்மீக அறிவுரை நல்கினர்.மிக எளிய பாவ பக்தியையும் இசையையும் அவர்கள் கைக்கொண்டனர்.

கிடைப்பதை வைத்துக் கொண்டு வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு, காலநேரத்தை ஆன்மீக நெறியில் ஈடுபடுத்தினர் முன்னோர்.அனைத்து மக்களும் ஆன்மீகத்தில் ஏதாவது ஒரு வழியில் ஈடுபட பக்தி மார்கத்தை அன்பர்கள் இசை மூலம் பரப்பினர்.கபீர்தாஸர், துகாராம் போன்றோர் தாம் தொழில் செய்யும் போதும் இறை நாமத்தையும் புகழையும் பாடியே பணி செய்தனர்.இன்று விஞ்ஞானஒ தொலைத்தொடர்பு தொழில் ‘னுட்பம் எவ்வளவோ வளர்ந்து வருகிறது.ஆனால் அதை நம் மக்கள் ஆன்மீகத்துக்குப் பயன்படுத்துவது மிகக் குறைவு தான்.பல நூறு மயில்கள் பயணம் செய்து ஸ்தலங்களை தரிசித்த காலம் போய், வீட்டுக்குள் மேஜைமீது எப்போது வேண்டுமாயினும் laptop மூலம் you tubeல் பல ஸ்தல மூர்த்திகளையும் உத்சவங்களையும் காணும் அற்புத வாய்ப்பு இன்று வந்தும், அதைப் பயன் படுத்தும் மக்கள் மிகக் குறைவே!

பொருள் தேடி, ஆடம்பர வாழ்வில் மனம் ஈடுபட்டுவிட்ட நிலையில் மனிதன் எப்போது எங்கு யார் மூலம் பணம் தேடலாம், அதை எப்படி சேமிக்கலாம், எப்படி புலன் இன்பத்துக்குச் செலவிடலாம் என்றே ஏங்கும் நிலை இன்று உள்ளது.

பக்த விஜயத்தில் காணப்போகின்ற அன்பர்கள் நம்மைப் போன்றோரே! அவர்கள் எப்படித் தம் அன்றாட வாழ்வையே ஆன்மீகப் பேரின்ப வாழ்வாக மாற்றிக் கொண்டனர் என்பதைக் காணப் போகிறோம்.மேலும் சனாதன மார்கத்தைத் தவிர இதர சமயங்களில் உள்ள மக்கள் தங்கள் நெறிகளைச் சற்றும் மறக்கவில்லை என்பதைக் குறிப்பிடுகின்றோம்.சனாதன வாதிகளுக்கு வர வர எல்லாமே take it for

granted ஆகி விட்டது.மிகவும் தொன்மையான ஆன்மீகப் பின்னணியுள்ள குடும்பங்கள் கூட இன்று மேலை தேசக் கலாச்சாரத்தில் அடிமையாகி, ஆங்கிலப் படிப்பு தரும் புகழுக்கும் பதவிக்கும் பணத்துக்கும் ஆளாகி மரபுகளை மறக்கும் சூழலையும் காண முடிகின்றது.

இதை எல்லாம் மீறி யார் ஒருவர் பல பிறவிகளில் விழிப்புணர்வில் ஆன்மீக எழுச்சியும் பரிணாமம் வேண்டும் என்று இறைவனிடத்தில் மனு போட்டு உள்ளாரோ அவர்க்கே அது கிடைக்கும்.நாம் ஒரு AIR போல அமைதியாக சதா செய்திகளைச் சமூஹத்துக்குத் தர வேண்டும்.அவை அனைத்தும் முதலில் நமக்கே தான் உதவ வேண்டும்.பக்த விஜயத்தை எழுதும் எங்களுள் முதலில் மாற்றத்தைக் காண நாங்கள் முற்பட வேண்டும்.

இக்காலக் கல்வி ஆன்மீகத்துக்குத் துளியும் இடம் தருவதில்லை.அதை மக்களும் விரும்பவில்லை.வெறும் marks வாங்கும் readymade கல்வி தான் இன்று தேவை. ஆனால் ஒரு பள்ளி ஆசிரியராக அடியேன் பணிசெய்ததில் இருந்து உணர்ந்த உண்மை.குழந்தைகளுக்கு ஆன்மீகத்தை அழகாக எளிமையாகத் தொடர்பு படுத்திக் கூறும் போது, அவர்கள் ரசிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், மதிக்கிறார்கள், சிந்திக்கிறார்கள்.பொறுமை நமக்கு இல்லை! குழந்தைகளைக் குறை கூறாதீர்.ராஜராஜனைப் பற்றித் தெரிந்து கொண்டு கோடை விடுமுறையில் சிதம்பரத்துக்கும் தஞ்சைக்கும் பயணம் செய்து வந்து project செய்த மாணவனைக் காட்ட முடியும்.

ஆண்டாளைப் பற்றித் தெரிந்து கொண்டு ஸ்ரீவில்லிப்புத்தூர் உற்சவத்தை you tubஎல் பார்த்த மாணவனையும் காட்ட முடியும்.பத்து பேரில் ஒருவருக்கு நம் ஆன்மீக வழிகாட்டல் தேவை.அவருக்காக நாம் சதா ஆன்மீக பேசுவோமே!

கடந்த சில மாதங்களாக நம் வீட்டில் விளையாடக் கூட போகாமல் சதா கர்நாடக இசையையும் அபங்கமும் பாடும் TEEN AGE மாணவர்களைக் காட்டுகிறேன்! அபங்கத்துக்கு உரிய எளிய விளக்கம் கேட்டும், அதன் சம்பந்தப்பட்ட அடியார் கதையும் கேட்டு அறியும் அவர்கள் நாளை தம் வாழ்க்கைக்கு ஆழமான பலம் சேர்க்கிறார்கள்.அவர்கள் தந்த ஊக்கமே இந்த பக்த விஜயம்.

இவர்களுள் அனைவரும் நம்முள்ளே இருக்கிறார்கள்.அவர்களை நம்முடன் தொடர்புபடுத்தி இனம் காண்பதே இக்கட்டுரையின் முக்கியக் குறிக்கோள்! நம்முள் இருக்கும் தன்மைகளை இந்த அடியவர்களுடன் தொடர்பு படுத்துவதே uniting ஆகும்! சில அன்பர்களின் வாழ்க்கையில் நிகழும் மிக முக்கிய நிகழ்வு மட்டும் சில

இடங்களில் வருவதையும் காண்க.

ஸ்ரீரகுமாயி தேவி சமேத பாண்டுரங்கன் அருளால், ஸ்ரீசாது சந்துக்களின் [அன்பர்கள்] அருளால் இந்த நூலை எழுத எங்களுக்கு மனிதப்பிறவில் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்கிறோம்.சமூஹ மாற்றத்துக்கு இது அவசியம் உதவும் என்பதில் ஐயமில்லை! தனி மனிதன் மாற அவனைச் சார்ந்தோர் மாற, சமூஹம் மாறும்!

* இதற்கு அடுத்து miracles, BMIAC CONCEPT ஆகியவற்றைப் படிக்கவும்.

ஆசியர்கள்.
சென்னை
6.12.2012